**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.** 12

Name : திரு. குமரேசன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:03.09.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று விட்டேன். அயனிவிளையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் 20.04.2021ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது செந்தில் மனைவி மஞ்சு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்தபுகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண்.108/2021 பிரிவுகள் 294(பி), 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. அசலை நீதிமன்றத்திற்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நிலையம் வந்து தான் புகார் மனு கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் இரண்டு இடங்களில் வெட்டுக்காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மணியன் என்பவர் புகார்தாரரிடம் கூறியதாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல ஆஜர் எதிருக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.